**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கூடலூர்**

**முன்னிலை – திரு. G. சரவணகுமார், B.A., B.L., (Hon's)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கூடலூர்**

**2026–ம் ஆண்டு, ஜுன் மாதம் 8–ம் நாள் திங்கட்கிழமை**

**CC.No. 20/2024**

**CNR.No.TNNS070003472024**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசு தரப்பில் காவல் ஆய்வாளர்,<br>தேவர்சோலை காவல் நிலையம்,<br>குற்றஎண்.104/2023. |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | – | திரு. சுரேஷ், வயது (37/2024)<br>த/பெ. செல்வம்,<br>க.எண்.21/368,<br>தட்டகொல்லி, 2 வது மைல், கூடலூர். |
| வனையப்பட்ட குற்றம் | – | U/s. 457(1) and 380(1) of IPC |
| குற்றம் நிகழ்ந்த நாள் | – | 24.12.2023 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 25.12.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | – | 25.12.2023, 12 நாட்கள் |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | 06.01.2024 |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 01.04.2024 |
| குவிமுச.பிரிவு.240–இன் கீழ் எதிரிகளிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 07.04.2025 |
| சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாட்கள் | – | |

| சாட்சிகள் | முதல் விசாரணை செய்யப்பட்ட நாள் | குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|
| அ.சா.1 | 22.08.2025 | 22.08.2025 |



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.08 18:03:38 +0530

<table>
<tr><td rowspan="3"></td><td rowspan="3"></td><td>அ.சா.2</td><td>22.08.2025</td><td>22.08.2025</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>21.11.2025</td><td>21.11.2025</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>30.04.2026</td><td>30.04.2026</td></tr>
<tr><td>குவிமுச.பிரிவு.311–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம்</td><td>–</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>குவிமுச.பிரிவு.313(1)(ஆ)–இன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>–</td><td colspan="3">11.05.2026</td></tr>
<tr><td>தலைமறைவு எதிரி குறித்த விவரம்</td><td>–</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம்</td><td>–</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>தீர்மானம்</td><td>–</td><td colspan="3">எதிரி இ.த.ச பிரிவுகள் 457(1) மற்றும் 380(1)ன் கீழ் குற்றவாளி இல்லை</td></tr>
</table>

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் குற்றம் புலன் கொள்ளப்பட்டு, 03.04.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையீட்டாளர் தரப்பில் தேவர்சோலை காவல் ஆய்வாளர் அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. ஜெகதீசன் மற்றும் திருமதி.S. மகாலட்சுமி, அவர்களும் முன்னிலையாகி இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து இறுதியாக கடந்த 20.05.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்ததில் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீ ர் ப் பு ரை</u>

குற்ற முறையீட்டாளர் தரப்பில் கடந்த 24.12.2023 அன்று அதிகாலை 01.30 மணியளவில் தேவர்சோலை காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட

பழைய பெட்ரோல் பங்க் அருகில் உள்ள அரசுக்கு சொந்தமான BSNL அலுவலகத்திற்கு சென்று குற்ற நோக்கத்துடன் அத்துமீறி உள்ளே சென்று அங்கு வைத்திருந்த சுமார் 3000 மதிப்புள்ள காப்பர் ஒயர் மற்றும் இரும்பு கம்பிகளை யாருக்கும் தெரியாமல் சுய ஆதாயத்திற்காக திருடிச் சென்ற எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவுகள் 457(1) மற்றும் 380(1)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் எனவும் கு.வி.மு.ச. பிரிவு 173(2)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) குற்றம் புலன் கொள்ளல்:–**

இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவு 457(1), 380(1)–ன் கீழான குற்றம் இந்நீதிமன்றத்தால் கு.வி.மு.ச. பிரிவு. 190(1)(b)–ன் கீழ் புலன் கொள்ளப்பட்டு வழக்கு கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தொடர்ச்சியாக எதிரிக்கு நீதிமன்றத்தில் முன்னிலையாக கு.வி.மு.ச. 204(1)(a)–ன் கீழ் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது.

**3). எதிரிக்கு நகல் வழங்கல் மற்றும் முதல் நிலை விசாரணை:–**

அழைப்பாணையின் பேரில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும் எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு. 207.ன் கீழ் எவ்வித தாமதமுமின்றி இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிக்கு வழக்கு விவரங்கள் தெரிந்து கொள்ள வழக்காவண நகல்கள் வழங்கப்பட்டு போதிய அவகாசம் கொடுத்த பின்னர் கு.வி.மு.ச. பிரிவு. 281–

ன் கீழ் வழக்கு சாராம்சங்கள் குறித்தும் விளக்கி வினவ கேட்டதில் எதிரி குற்றவாளி இல்லையென மறுத்துரைத்தார்.

**<u>4) குற்றச்சாட்டு வனைதல்:–</u>**

இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்ததில் எதிரி குற்றம் புரிந்ததற்கான போதிய முகாந்திரங்கள் உள்ளதாக தோன்றியதால் எதிரி மீது இ.த.ச பிரிவு 457(1) மற்றும் 380(1).ன் கீழான குற்றங்களுக்கு கு.வி.மு.ச. பிரிவு.240(1)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன. எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அவருக்கு கு.வி.மு.ச.பிரிவு 240(2)–ன் கீழ் படித்து காண்பித்து குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கி வினவி கேட்கப்பட்டது.

**<u>5) எதிரியின் வாதம்:–</u>**

எதிரியிடம் மேற்கண்டபடி குற்றச்சாட்டு வனைந்து வினவி கேட்கப்பட்டதில் எதிரி தான் **"குற்றவாளி இல்லை"** என தன் மீதான குற்றச்சாட்டுகளை பொய் என மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டு அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் சார்வு செய்யப்பட்டன.

**<u>6. அரசு தரப்பு சாட்சியம்</u>**

இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1. முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1. முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆவணங்களை கவனமாக

பரிசீலிக்கையில், மாதிரி வரைபடம் மற்றும் படிவம் – 91 ஆகியவை அ.சா.ஆ.10 என தவறுதலாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, 91 – படிவங்கள் அ.சா.ஆ.11 மற்றும் 12 ஆக இதன்மூலம் திருத்தப்படுகிறது. பின்னிட்டு அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டன.

7) <u>**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சாரம்சம் பின்வருமாறு:–**</u>

7.1) அ.சா.1 – ரவி இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் ஆவார். அ.சா.1 BSNL–ல் Telephone Mechanic ஆக பணியாற்றி வந்துள்ளார்.

அ.சா.2 திரு. ராஜு தற்போது தேவர்சோலை 1வது டிவிசனில் குடியிருந்து வந்துள்ளார்.

அ.சா.3 திரு. ஹரிஸ் மோன் தற்போது தொரப்பள்ளியில் குடியிருந்து கொண்டு BSNL–ல் டெக்னிசனாக வேலை செய்து வந்துள்ளார்.

அ.சா.4 திரு. கபில்தேவ், தூத்துக்குடி மாவட்டம் ஏரல் காவல் நிலையத்தில் தற்போதைய உதவி ஆய்வாளரும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியும் ஆவார்.

7.2. கடந்த 25.12.2023 அன்று அ.சா.2 – ராஜு என்பவர் அ.சா.1 – ரவிக்கு போன் மூலம் BSNL Exchange–ன் பூட்டுகள் உடைந்திருப்பதாக கூறியுள்ளார். அ.சா.1 மற்றும் JTO தனஜெயன் ஆகியோர் அங்கு சென்று பார்த்தபோது Exchange னுள் எல்லாம் சரியாக இருந்துள்ளது. ஸ்டோர் ரூமில் ரூ.3000/– மதிப்பிலான கேபில், ஆங்கிள், இரும்பு பொருட்கள் ஆகியவை காணாமல் போனது தெரியவந்துள்ளது. பின்னர் அ.சா.1 சம்பவம் தொடர்பாக காவல் நிலையம் சென்று அ.சா.ஆ.1 – புகார் அளித்துள்ளார்.

7.3. அ.சா.1 கடந்த 25.12.2023 அன்று சுமார் 11.00 மணியளவில் தேவர்சோலை காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.1 புகாரை நிலைய பொறுப்பில் இருந்த தலைமை காவலர் விஜயகுமார் பெற்றுக்கொண்டு அதன் தன்மைக்கேற்ப தேவர்சோலை காவல் நிலைய குற்ற எண். 104/2023 என இ.த.ச. பிரிவுகள் 457(1), 380(1)–ன் கீழ் அ.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதனை புலன் விசாரணைக்காக அ.சா.4 உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார்.

7.4. அ.சா.4 உதவி ஆய்வாளர் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் சம்பவ இடம் சென்று சாட்சிகள் திரு.ஜி.எஸ்.ராஜ் மற்றும் திரு.தினேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு அ.சா.ஆ.9 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.10 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். எதிரியை அன்றைய தினமே கூடலூர் 2ம் மைல் வேடன்வயல் என்ற பகுதியில் வைத்து கைது செய்துள்ளார். எதிரியை விசாரித்தபோது எதிரி சாட்சிகள் ஹரிஸ்முன் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும், ஆசைவார்த்தையும் இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரி அவரது வீட்டிலிருந்து ஒப்படைத்த 9 வழக்கு சொத்துக்களையும், எதிரி மேற்கண்ட பொருட்களை திருட பயன்படுத்திய Mahindra Jeeta வாகனத்தையும் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பபற்றியுள்ளார்.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.08 18:03:58 +0530

7.5. பின்னர் அ.சா.4 விசாரணை அதிகாரி கைது செய்யப்பட்ட எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். தொடர்ச்சியாக எதிரியை அடைப்புகாவல் அறிக்கை தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு நீதித்துறை நடுவர் முன்பு ஆஜர்படுத்தியுள்ளார். அ.சா.4 விசாரணை அதிகாரி கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளுக்கு அ.சா.ஆ.11 மற்றும் 12 – படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR No.5/2024 மற்றும் PR No.6/2024 பெற்றுள்ளார். தொடர்ச்சியாக அ.சா.4 விசாரணை அதிகாரி தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதாக அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

**<u>8) எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு.313(1)(b)–ன் கீழ் வினவல்:–</u>**

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1. முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு. 313(1)(b)–ன் கீழ் விளக்கி வினவிய போது அதனை எதிரி மறுத்துரைத்தார். எதிரி தரப்பில் எவ்வித சாட்சியங்களும் சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. தொடர்ச்சியாக எதிரி தரப்பு சாட்சியம் முடித்துவைக்கப்பட்டது.

9) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் நன்கு பரிசீலிக்கபபட்டது.

10) **<u>தீர்வுக்குரிய பிரச்சினைகளாவன:-</u>**

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாவன,**

**(i) எதிரி மீதான இ.த.ச பிரிவு 457(1) –ன் கீழான குற்றச்சாட்டும்,**

**(ii) எதிரி மீதான இ.த.ச பிரிவு 380(1) –ன் கீழான குற்றச்சாட்டும்,**

**அரசு தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**<u>11. அரசு தரப்பு வாதம்:-</u>**

அரசு தரப்பில் அரசு அலுவலகமான BSNL அலுவலகத்தில் எதிரி அத்துமீறி உள்ளே சென்று வழக்கு சொத்துக்கள் ரூ.3000/- மதிப்பிலான காப்பர் ஒயர் மற்றும் இரும்பு கம்பிகளை திருடியுள்ளதான எதிரி மீதான குற்றச்சாட்டுகளானது புகார்தாரரான அ.சா.1 மூலமும், பார்வை மகஜர் மற்றும் கண்ணுற்ற சாட்சியமான அ.சா.2 மூலமும், ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.3 மூலமும், புலன் விசாரணை அதிகாரி சாட்சியான அ.சா.4 மூலமும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிக்கு சட்டப்படியான அதிகபட்ச தண்டனைகள் வழங்கிட வேண்டியும் வாதிட்டார்.

**<u>12. எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதம்:-</u>**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா.4 ன் சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு ஒத்துரைப்புகளின்றி உள்ளது என்றும், எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து போலீசாரால்



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.08 18:04:10 +0530

தடய சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலமும் பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜர் சாட்சியங்களும் முரண்பட்டுள்ளது என்றும், தடய சொத்துக்கள் கைப்பற்றுகை முரண்பட்டுள்ளது என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரிக்கு சந்தேகத்தின் பலனை கொடுத்து விடுவிக்க வேண்டியும் வாதிட்டார்.

**<u>13. தீர்வு:–</u>**

13.1) எதிரி மீது கடந்த 24.12.2023 அன்று அதிகாலை 01.30 மணியளவில் தேவர்சோலை பழைய பெட்ரோல் பங்க் அருகில் உள்ள அரசுக்கு சொந்தமான BSNL அலுவலகத்திற்குள் குற்ற நோக்கத்துடன் அத்துமீறி உள்ளே சென்று அங்கு வைத்திருந்த சுமார் ரூ.3000/– மதிப்புள்ள காப்பர் ஒயர் மற்றும் இரும்பு கம்பிகளை திருடியுள்ளதாக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 457(1) மற்றும் 380(1)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளன.

13.2. இ.த.ச. பிரிவு 380(1) ஆனது குடியிருப்பு வீட்டில் திருட்டு செயலுக்கான தண்டனை பற்றியும் அதிலுள்ள திருடுதல் என்பது இ.த.ச. பிரிவு 378–ன் கீழும், இரவு நேரத்தில் கன்னமிட்டு வீட்டிற்குள் அத்துமீறுதல் இ.த.ச பிரிவு 457(1).ன் கீழும், திருடும் எண்ணத்துடன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைதலானது இ.த.ச பிரிவு 445.ன் கீழும், கீழ்கண்டுள்ளபடி வரையறுக்கப்பட்டுள்ளது.

Section 378 in The Indian Penal Code: ***Theft***.*—Whoever, intending to take dishonestly any movable property out of the possession of any person without that person’s consent, moves that property in order to such taking, is said to commit theft. Explanation 1.A thing so long as it is attached to the earth, not being movable property, is not the subject of theft; but it becomes capable of being the subject of theft as soon as it is severed from the earth.*

Section 380(1) of IPC: ***Theft in dwelling house, etc.****—Whoever commits theft in any building, tent or vessel, which building, tent or vessel is used as a human dwelling, or used for the custody of property, shall be punished with imprisonment of either description for a term which may extend to seven years, and shall also be liable to fine.*

Section 445 of IPC ***House breaking.****—A person is said to commit “house-breaking” who commits house-trespass if he effects his entrance into the house or any part of it in any of the six ways hereinafter described; or if, being in the house or any part of it for the purpose of committing an offence, or, having committed an offence therein, he quits the house or any part of it in any of such six ways, that is to say—*

*(First) —If he enters or quits through a passage by himself, or by any abettor of the house-trespass, in order to the committing of the house-trespass.*

*(Secondly) —If he enters or quits through any passage not intended by any person, other than himself or an abettor of the offence, for human entrance; or through any passage to which he has obtained access by scaling or climbing over any wall or building.*

*(Thirdly) —If he enters or quits through any passage which he or any abettor of the house-trespass has opened, in order to the committing of the house-trespass by any*

*means by which that passage was not intended by the occupier of the house to be opened.*

(Fourthly) *—If he enters or quits by opening any lock in order to the committing of the house-trespass, or in order to the quitting of the house after a house-trespass.*

(Fifthly) *—If he effects his entrance or departure by using criminal force or committing an assault or by threatening any person with assault.*

(Sixthly) *—If he enters or quits by any passage which he knows to have been fastened against such entrance or departure, and to have been unfastened by himself or by an abettor of the house-trespass.*

Section 457(1) of IPC ***Lurking house-trespass or house-breaking by night in order to commit offence punishable with imprisonment.****—Whoever commits lurking house-trespass by night, or house-breaking by night, in order to the committing of any offence punishable with imprisonment, shall be punished with imprisonment of either description for a term which may extend to five years, and shall also be liable to fine; and, if the offence intended to be committed is theft, the term of the imprisonment may be extended to fourteen years.*

13.3. மேற்கண்ட இதச. பிரிவு. 378 மற்றும் 380(1) ஆகியவற்றில் ஒருங்கே வாசித்ததில் ஒரு நபரின் அனுபவத்தில் உள்ள ஒரு அசையா சொத்தை அந்த நபருக்கு தெரியாமலோ அல்லது ஒப்புதல் இல்லாமலோ நேர்மையற்ற முறையில் தீய எண்ணத்துடன் எடுப்பதும், அத்தகைய குற்றம் மனிதர்கள் குடியிருக்கும் பகுதியாகவோ அல்லது பொருட்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் பகுதியாகவோ இருத்தல் வேண்டும் என்றும், அத்தகைய செயலுக்கு 7 ஆண்டுகள் வரை நீட்டிக்கதக்க தண்டனையும் அபராதமும் விதிக்கப்படுதல் வேண்டுமென்றும் உட்கூறுகள் அமைந்துள்ளது.



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.08 18:04:20 +0530

13.4. அதுபோல் இ.த.ச 445 மற்றும் 457(1) ஆகியவற்றை ஒருங்கே வாசித்தலில் பிரிவு 445.ல் உள்ள ஆறு வழிகளில் ஏதேனும் ஒரு வகையில் குடியிருக்கும் வீட்டில் இரவு நேரத்தில் நுழைவதும் அத்தகைய அத்துமீறி நுழைதல் திருட்டு செயலுக்காக ஈடுபடும் பட்சத்தில் அத்தகைய செய்கைகளுக்கு 14 ஆண்டுகள் வரை நீட்டிக்கத்தக்க சிறை தண்டனை விதிக்கப்படுதல் வேண்டுமென்று உட்கூறுகள் அமைந்துள்ளன.

13.5. எதிரிக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டை அரசு தரப்பு உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதா என பரிசீலிக்கையில், இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரராக அ.சா.1, பார்வை மகஜர் மற்றும் கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2, ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக அ.சா.3, புலன் விசாரணை அதிகாரியாக அ.சா.4 ம் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

13.6. அரசு தரப்பு வழக்கின்படி அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலும் கு.வி.மு.ச பிரிவு 161.ன் கீழான வாக்குமூலத்திலும் 24.12.2023 ந் தேதி நள்ளிரவு சுமார் 1.30 மணியளவில் TN 43 7822 என்ற எண் கொண்ட மகேந்திரா Jeeta வாகனம் BSNL Office அருகே நிறுத்தப்பட்டு 3 அடையாளம் தெரியாத ஆண் நபர்கள் இரும்பு பொருட்களை ஏற்றியதை அ.சா.2 ராஜு பார்த்ததாகவும், உடனே அவர் சத்தம் போட்டதில் இருவர் புதரில் புகுந்து ஓடிவிட்டதாகவும், பின்னர் திருட்டு நடந்துள்ளதாக அ.சா.2 ராஜு என்பவர் அ.சா.1 க்கு போனில் தகவல் சொன்னதாகவும், அதன்பின்பு அ.சா.1 BSNL JE தனன்ஜெய் குமார் தாஸ்–க்கு தகவல் தெரிவித்த பின்பு அவர்கள் இரண்டு

பேரும் BSNL Contract Staff வுடன் வந்து திருட்டு நடந்த இடத்தை பார்வையிட்டதாகவும், அங்கே ஆபிஸின் முன்கதவு மற்றும் பின்கதவு உடைக்கப்பட்டும் அலுவலகத்தில் இருந்த பழைய இரும்பு பொருட்கள் திருடப்பட்டு இருந்தது உண்மையென தெரியவந்ததாகவும் கண்டுள்ளது.

13.7. அ.சா.1ன் சாட்சியத்தையும், அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலம், அ.சா.ஆ.8 – முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை பரிசீலிக்கையில், கடந்த 24.12.2023 அன்று BSNL அலுவலகத்தில் ஒரு குற்ற சம்பவம் நடந்துள்ளது என்பது நிரூபணமாகிறது. எனினும், அந்த குற்ற சம்பவத்தில் எதிரி தான் ஈடுபட்டார் என்பதை அரசு தரப்பு உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதா என ஆராயவேண்டியது அவசியமாகும்.

13.8. அவ்வாறு அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் கவனமாக பரிசீலிக்கையில்,

அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 25.12.2023 அன்று அ.சா.2 – ராஜு என்பவர் அ.சா.1 – ரவிக்கு போன் மூலம் BSNL Exchange–ன் பூட்டுகள் உடைந்திருப்பதாகவும், அ.சா.1 மற்றும் JTO தனஜெயன் ஆகியோர் தேவர்சோலை Exchange –க்கு சென்று பார்த்தபோது Exchange னுள் எல்லாம் சரியாக இருந்ததாகவும், ஸ்டோர் ரூமில் ரூ.3000/– மதிப்பிலான கேபில், ஆங்கிள், இரும்பு பொருட்கள் ஆகியவை காணாமல் போயிருந்ததாகவும், அ.சா.1 சம்பவம் தொடர்பாக காவல் நிலையம் சென்று அ.சா.ஆ.1 – புகார் அளித்துள்ளார் சாட்சியமளித்துள்ளார்.

13.9. அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் நாங்கள் Store–ல் வைத்திருக்கும் பொருட்களுக்கு Inventory வைத்துள்ளோமா என்றால் இருக்கிறது என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் Inventory பதிவேட்டை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார்.

13.10. இவ்வழக்கில் சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 தனது சாட்சியத்தில்" கடந்த 24.12.2023 அன்று இரவு 01.00 மணியிலிருந்து 01.30 மணியளவில் வாகனத்தில் இரும்பை போடும் சத்தம் கேட்டது. நான் அப்போது எனது வீட்டில் இருந்தேன். சத்தம்கேட்டு நான் வீட்டில் இருந்து வெளியில் வந்த பார்த்தபோது, 3 நபர்கள் Exchange –ல் இருந்து இரும்பு பொருட்களை தூக்கி பிக்கப் போன்ற வாகனத்தில் போட்டுக்கொண்டிருந்தனர். மீண்டும் Exchange –லிருந்து பொருட்களை எடுப்பதற்காக மேலே வந்து கொண்டிருந்தனர். 3 பேர்கள் இருந்ததால், அங்கு யானை நடமாட்டம் இருப்பதால் வனத்துறை சம்பந்தப்பட்ட ஆட்களாக இருக்கும் என்று சிறிது நேரம் நின்று பார்த்து அவர்களை மேலே வரும்போது பார்த்தபோது, அவர்கள் வனத்துறையை சார்ந்தவர்கள் அல்ல எனத்தெரிந்து யார் நீங்கள் இந்த நேரத்தில் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டபோது அவர்கள் அருகில் இருந்த காட்டிற்குள் ஓடிவிட்டனர் என்று சாட்சியமளித்துள்ளார்.

13.11. மேலும் அ.சா.2 தனது சாட்சியத்தில் நான் எனது கையில் இருந்த பவர்புல்லான டார்ச்–யை வைத்து அடித்து பார்த்தபோது வண்டியின்

பின்பக்கம் எனக்கு நன்கு தெரிந்தது. நான் வண்டியின் பின்புறம் இருந்த வண்டியின் பதிவு எண்ணான TN 43 Y 7822 என்று அதில் காணப்பட்டது. அந்த நபர்கள் வண்டியை எடுத்துச் சென்றுவிட்டனர். யானை நடமாடும் பகுதி என்பதால் எனக்கும் பயம் இருந்தது. மறுநாள் காலை 06.00, 06.30 மணியளவில் நான் மேலே சென்று BSNL Exchange –ஐ பார்த்தபோது அங்கு ஸ்டோர் ரூம் மற்றும் BSNL ஆபிஸ் கதவும் உடைக்கப்பட்டிருந்தன. நான் உள்ளே சென்று பார்க்கவில்லை. உடனே நான் அ.சா.1 ரவிக்கு போன் மூலம் இது குறித்து தகவல் தெரிவித்தேன். அவர்கள் வந்த உடன் நான் அங்கிருந்து வந்துவிட்டேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

13.12. வழக்காவணங்களை கவனமாக பரிசீலிக்கையில், அ.சா.1 காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 – புகார் மனுவிலும், அ.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கையிலும் 24.12.2023 ந் தேதி நள்ளிரவு சுமார் 01.30 மணியளவில் BSNL Office அருகே TN 43 7822 என்ற எண் கொண்ட மகேந்திரா Jeeta வாகனம் நிறுத்தப்பட்டு 3 அடையாளம் தெரியாத ஆண் நபர்கள் இரும்பு பொருட்களை ஏற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

13.13. அவ்வாறே அ.சா.2 ம் தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று 3 நபர்கள் Exchange – ல் இருந்து இரும்பு பொருட்களை தூக்கி பிக்கப் போன்ற வாகனத்தில் போட்டுக்கொண்டிருந்தனர் என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் எதிரி சுரேஷ் மீது மட்டும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13.14. ஆனால் அ.சா.1 தனது கு.வி.மு.ச பிரிவு 161(3)ன் கீழான 27.01.2024 தேதிய வாக்குமூலத்தில் சுரேஷ் என்பவர் மட்டுமே திருடியுள்ளது தெரியவந்தது என்றும், நான் புகார் கொடுக்கும்போது 3 பேர் என்று ராஜு என்பவர் சொன்னதன்பேரில் புகாரில் தெரிவித்தேன் என்று வாக்குமூலம் அளித்துள்ளார். அவ்வாறே அ.சா.2ம் தன்னுடைய 27.01.2024 தேதிய வாக்குமூலத்தில் நான் இருட்டில் சரியாக பார்க்காமல் திருட வந்தது 3 பேர் என்று எனது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தேன்., ஆனால் ஒருவர் தான் என்பது பிறகு விசாரணையிலும், அது சுரேஷ் என்பது தெரியவந்தது என்று வாக்குமூலம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.2ன் நீதிமன்ற சாட்சியம் அவ்வாறு அமையவில்லை.

13.15. அ.சா.2 தனது நீதிமன்ற சாட்சியத்தில் 3 நபர்களை பார்த்ததாகவே சாட்சியமளித்துள்ளார். அது குறித்து அரசு தரப்பில் எந்தவிதமான விளக்கமும் முன்வைக்கப்படவில்லை. இவ்வழக்கில் 3 நபர்கள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக அ.சா.2 குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ள நிலையில், அ.சா.4 புலன் விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில் குற்ற சம்பவத்தில் எதிரி மட்டும்தான் ஈடுபட்டார் என்றும், மற்ற இரு நபர்கள் சம்பவ இடத்தில் இல்லை என்று தெரியவந்ததால் அவர்கள் இருவரையும் நீக்கி நீக்கல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் அந்த நீக்கல் அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் இரண்டு நபர்கள் யார் என்றோ, அவர்கள் சம்பவ

இடத்தில் இல்லை என்று எவ்வாறு புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4 முடிவு செய்தார் என்பது பற்றியோ அரசு தரப்பில் எந்தவிதமான விளக்கமும் அளிக்கப்படவில்லை.

13.16. மேலும் ஆவணங்களை கவனமாக பரிசீலிக்கையில் அ.சா.2 இந்நீதிமன்றத்தில் 22.08.2025 அன்று சாட்சியமளிக்கும் போது எதிரியும் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். ஆனால், அரசு தரப்பில் எதிரியை அ.சா.2ன் மூலம் அடையாளம் காண்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எதிரியை குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதை பார்த்ததாக அ.சா.2ன் சாட்சியம் அமையவில்லை. மாறாக, TN 43 Y 7822 என்ற வாகனத்தை பார்த்ததாக தான் அவரது சாட்சியம் அமைந்துள்ளது. கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 எதிரியை அடையாளம் காட்டாத நிலையில், எதிரி தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்று அனுமானிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது ஆகாது.

13.17. மேலும் எதிரி தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்று கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 அடையாளம் காட்டாத நிலையில், எதிரி கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே இவ்வழக்கில் எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக எதிரி நிர்ணயிக்கப்பட்டுள்ளார் என்பது தெரியவருகிறது.

13.18. எனவே ஒப்புதல் வாக்குமூலத்தின் சங்கதிகளை அரசு தரப்பு உரிய முறையில் நிரூபித்துள்ளதா என பரிசீலிக்க வேண்டியுள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தின் சங்கதிகள் குறித்து எவ்வாறு



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.08 18:04:39 +0530

நிரூபிக்கப்படவேண்டும் என இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 25 மற்றும் 27 ல் கீழ்க்கண்டபடி வரையறுக்கப்பட்டுள்ளன.

Section 25 in The Indian Evidence Act, 1872 ***<u>Confession to police officer not to be proved.</u>***—*No confession made to a police officer1, shall be proved as against a person accused of any offence.—No confession made to a police officer1, shall be proved as against a person accused of any offence."*

*Section 27 in The Indian Evidence Act, 1872* **<u>How much of information received from accused may be proved.</u>**—*Provided that, when any fact is deposed to as discovered in consequence of information received from a person accused of any offence, in the custody of a police officer, so much of such information, whether it amounts to a confession or not, as relates distinctly to the fact thereby discovered, may be proved.*

13.19. மேற்கண்ட பிரிவு 25, மற்றும் 27–ன்படி, பிரிவு 25 ன் கீழ் காவல் அதிகாரி முன்னிலையிலான ஒப்புதல் வாக்குமூலத்தை நிரூபணம் செய்யவியலாது. ஆனால் பிரிவு 27 ஆனது பிரிவு 25 ன் விதிவிலக்காக " . . . when any fact is deposed to as discovered in consequence of information received . . . " என காவல் அதிகாரியின் பொறுப்பில் இருக்கும்போது எதிரி கொடுக்கும் புதிதாக வெளிகொணரப்படும் சங்கதிகளை பொறுத்தவரை நிரூபிக்கலாம் என கண்டுள்ளது.

13.20. அரசு தரப்பு வழக்கின்படி எதிரியை விசாரணை அதிகாரி அ.சா.4 கபில்தேவ் 25.12.2023 அன்று மதியம் சுமார் 02.00 மணிக்கு கூடலூர் இரண்டாம் மைல் வேடன் வயல் என்ற பகுதியில் வைத்து கைது

செய்ததாகவும், அன்றைய தினமே அவரது வீட்டிற்கு அழைத்து சென்று விசாரித்தபோது எதிரி அ.சா.4 உதவி ஆய்வாளரிடம் சாட்சிகள் அ.சா.3 ஹரிஷ்முன் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 9 வழக்கு சொத்துக்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாகவும் உள்ளது.

13.21. ஆனால் ஒப்புதல் வாக்குமூலத்தில் இன்று எனது வீட்டிற்கு வந்து இது சம்மந்தமாக விசாரணை செய்தபோது நான் திருடியதையும், திருடுவதற்காக கொண்டு சென்ற என்னோட வண்டி TN 43 Y 7822 என்ற வண்டியையும் உங்க கிட்ட ஆஜர் செய்தேன் என்று உள்ளது. ஆனால் 9 வழக்கு சொத்துக்களை எதிரியிடமிருந்து கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாக சங்கதிகள் எதுவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இல்லாதது அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்கச் செய்கிறது.

13.22. மேலும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.3 எத்தனை மணிக்கு ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள் என்றால் நியாபகமில்லை. காலையில் சென்றுவிட்டோம் என்று சாட்சியமளித்துள்ளார்.

13.23. மேலும் அ.சா.3ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில், அ.சா.3 பாலகிருஷ்ணன் என்பவரும் தான் எதிரியின் வீட்டில் இருந்த பொருட்கள் தான் திருடு போன பொருட்கள் தான் என அடையாளம்

காண்பித்தோம் என்றும், போலீசார் எதிரியின் வீட்டிலிருந்த திருடுபோன பொருட்களை கைப்பற்றினார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார் என்பது தெரியவருகிறது. அந்த பொருட்களை எதிரி அடையாளம் காட்டியதாகவோ, எதிரி எடுத்து ஆஜர் செய்ததாகவோ அ.சா.3 ன் சாட்சியம் அமையவில்லை. அ.சா.ஆ.8 ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியிலும் திருடுபோன பொருட்களை எதிரி ஆஜர் செய்ததாக சங்கதிகள் இல்லை. மாறாக, வாகனத்தை ஆஜர் செய்ததாக தான் ஒப்புதல் வாக்குமூலம் உள்ளது.

13.24. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின் சாட்சிகளில் அ.சா.3 மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளார். சாட்சி பாலகிருஷ்ணன் என்பவர் விசாரிக்கப்படவில்லை.

13.25. அ.சா.3 தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் போலீசார் விசாரித்தபோது எதிரி அவர் பொருட்களை திருடியதை ஒப்புக்கொண்டு தங்கள் முன்னிலையில் வாக்குமூலம் அளித்ததாகவும், அந்த வாக்குமூலத்தில் தானும் பாலகிருஷ்ணனும் சாட்சியாக இருந்து அ.சா.ஆ.4 கையெழுத்து செய்துள்ளதையும், திருடு போன பொருட்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி தன்னிடமும் பாலகிருஷ்ணனிடமும் கையெழுத்து பெற்றதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

13.26. அ.சா.3 ன் சாட்சியத்தை கவனமாக பரிசீலிக்கையில் அ.சா.3 தனது சாட்சியத்தில் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் JE என்னை தேவர்சோலையில் உள்ள BSNL Exchange –ற்கு செல்லவேண்டும் என்று

அழைத்தார். எதற்கு என்று நான் அவரிடம் கேட்டபோது நேற்று இரவு அங்கு திருடு போயிருப்பதாகவும், அங்கு சென்று பார்க்கவேண்டும் என்று கூறினார் என்று சாட்சியமளித்துள்ளார்.

13.27. மேலும் தனது சாட்சியத்தில் தேவர்சோலை காவல் நிலையம் சென்று JE புகார் அளித்தார். நாங்களும் அவருடன் சென்றிருந்தோம். வழக்கை பதிவு செய்துவிட்டு நாங்கள் சென்றுவிட்டோம். மறுநாள் காவல் நிலையத்தில் இருந்து போலீசார் என்னையும், பாலகிருஷ்ணனையும் BSNL Exchange–ல் திருடு போனது தொடர்பாக ஆளை கண்டுபிடித்துவிட்டதாகவும், எங்கள் முன்னிலையில் விசாரித்து எழுதி வாங்க வேண்டும் என்று கூறினார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13.28. அ.சா.3 ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில் புகார் கொடுத்த மறுநாள் தான் காவல் துறையினர் எதிரியை கண்டுபிடித்துள்ளனர் என்பது தெரியவருகிறது. ஆவணங்களை பரிசீலிக்கையில், அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்திலும்,. அ.சா.ஆ.8 – முதல் தகவல் அறிக்கையிலும் 25.12.2023 அன்று காலை 11.00 மணிக்கு தான் புகார் கொடுக்கப்பட்டது தெளிவாகிறது. ஆனால், அன்றைய தினமே பகல் 02.00 மணிக்கு எதிரி கைது செய்யப்பட்டதாக அ.சா.4 ன் சாட்சியம் அமைந்துள்ளது.

13.29. மேலும் காலை 11.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.08 18:04:50 +0530

பார்வை மகஜர் தயார் செய்து தொடர்ச்சியாக சாட்சிகள் ரவி, தனன்ஜெய், ராஜ் மற்றும் தினேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்பு அன்றைய தினம் 02.00 மணிக்கு அதாவது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததிலிருந்து 3 மணி நேரத்திற்குள் எதிரியை கைது செய்ததாக அ.சா.4 சாட்சியமளித்துள்ளது நம்பும்படியாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13.30. மேலும் அ.சா.3 புகார் கொடுக்கப்பட்டதற்கு மறுநாள் தான் எதிரியை கண்டுபிடித்துவிட்டதாக போலீசார் என்னை அழைத்தார்கள் என்று சாட்சியமளித்துள்ளது அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு அமைந்துள்ளது. மேலும் எதிரி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அன்றே கைது செய்யப்பட்டாரா அல்லது அதற்கு மறுநாள் கைது செய்யப்பட்டாரா என்று எதிரியின் கைது பற்றி சந்தேகத்தை எழுப்புவதாக உள்ளது.

13.31. இவ்வழக்கில் மற்றொரு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரின் சாட்சியான பட்டியல் சாட்சி பாலகிருஷ்ணன் என்பவர் விசாரிக்கப்படாதது அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114(g).ன் கீழ் எதிரிடை அனுமானம் எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

13.32. மேலும் அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட நேரம் ஒப்புதல் வாக்குமூலத்தில்

G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.08 18:04:53 +0530

குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளதும் அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்க செய்கிறது.

13.33. அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில் மேற்படி சாலையில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்திருந்தால் அந்த வாகனத்தில் பொருட்கள் இருந்ததா என்பது தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரிதான் என்றும், அவ்வாறு நான் கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்தேனா என்றால் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13.34. அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில் எதிரி தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை அ.சா.2 ராஜு என்பவரின் மூலம் உறுதிப்படுத்தினேனா என்றால் பொருட்களை கைப்பற்றும்போது உறுதிப்படுத்தினேன் என்று சாட்சியமளித்துள்ளார். எதிரியின் வாகனம் கைப்பற்றப்பட்டதாலேயே எதிரி தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்று அனுமானிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது ஆகாது.

13.35. மேலும் சாட்சிகளின் சாட்சியங்கள் முரண்பட்டுள்ள நிலையில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சங்கதிகள் பொறுத்து அ.சா.3 ன் சாட்சியத்தை மட்டும் அறுதியாக எடுத்துக்கொள்வது நீதியின் நலனுக்கு உகந்தது ஆகாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பு வழக்கின் சங்கதிகளான ஒப்புதல் வாக்குமூலத்தின் சங்கதிகளோ தடய சொத்துக்கள் கைப்பற்றுகை பற்றியோ எவ்வித

உறுதியூட்டும் சங்கதிகளும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் போதுமான அளவு வெளிக்கொணரப்படவில்லை.

13.36. இவ்வழக்கில் அரசு அலுவலகமான BSNL ஆபிஸிற்கு சொந்தமான ரூ.3000/– மதிப்பிலான வழக்கு சொத்துக்கள் காணாமல் போயுள்ளதும் அதுகுறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன் பேரில் அதற்காக தலைமை காவலர் அ.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டும், அ.சா.4 விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்து அ.சா.ஆ.9 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.10 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதும் போன்ற சங்கதிகள் நிரூபிக்கப்பட்டிருப்பினும் அரசு தரப்பில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் சங்கதிகளும் அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜரின் சங்கதிகளும் தடய சொத்துக்களின் கைப்பற்றுகையும் அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களுடன் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. மேற்கண்ட விவாதத்தின் அடிப்படையில் எதிரி மீதான இ.த.ச பிரிவு 457(1) மற்றும் 380(1)–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களுடன் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**15. முடிவுரை:–**

**இறுதியாக,**

**(i) எதிரி இ.த.ச. பிரிவு 457(1)–ன் கீழான குற்றச்சாட்டில் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும்**

**(ii) எதிரி இ.த.ச. பிரிவு 380(1)–ன் கீழான குற்றச்சாட்டில் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும் கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

16. இவ்வழக்கில் படிவம் 91 மூலம் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட P.R.No. 6/2024 என பதிவில் உள்ள வழக்கு சொத்துக்களான

(1) சுமார் 28.5 cm நீளமும் சுமார் 8 inch அகலமும் கொண்ட ஏனி போன்ற அமைப்புடன் கூடிய கருப்பு நிற பெயின்ட் பூசப்பட்ட இரும்பு – 2 எண்ணம்,

(2) சுமார் 19 inch நீளமுள்ள இரும்பு கம்பியினுள் இரண்டு சதுரவடிவ வாசர் பொறுத்தப்பட்டது – ஒன்று

(3) சுமார் 28 inch நீளமும் சுமார் 1.5 inch சுற்றளவும் கொண்ட ஒரு பாகம் கைபிடி போன்று மடக்கப்பட்ட உருளை – ஒன்று

(4) சுமார் 3 மீட்டம் நீளம் கொண்ட கருப்பு நிற கோட்டிங் பூசப்பட்ட UG கேபிள் – ஒன்று

(5) சுமார் 7 மீட்டர் அளவு கொண்ட கருப்பு நிற கேபிள் – ஒன்று

(6) சுமார் 33 inch காப்பர் நீக்கப்பட்ட கேபிள் ஒரு முனையிலும், அதன் தொடர்ந்து சுமார் 5 மீட்டர் அளவு கொண்ட கேபிள் ஒயர் (UG)– ஒன்று

(7) சுமார் 1.5 மீட்டர் அளவு கொண்ட வெட்டப்பட்ட கேபிள் (UG) – 1

(8) சுமார் 1.3 மீட்டர் அளவு கொண்ட வெட்டப்பட்ட கேபிள் (UG) – 1

(9) சுமார் 3.9 மீட்டர் அளவு கொண்ட ஒரு பகுதி உருக்கப்பட்ட துருபிடித்த கம்பி – 1

அதனை உரிய உரிமையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டுமென்றும், மேல்முறையீடு இருப்பின் அதன் உத்தரவுபடி நடந்துகொள்ள வேண்டியது என்றும்,

17. இவ்வழக்கில் P.R.No. 5/2024 என பதிவில் உள்ள வழக்கு சொத்தான TN 43 Y 7822 என்ற பதிவெண் கொண்ட Mahindra Jeeta Goods வாகனத்தை அதன் உரிமையாளர் இடைக்கால பாதுகாப்பில் பெற்று சென்றுள்ளார். மேற்படி வாகனத்தை அவர் பொறுப்பில் வைத்திருக்கவும், அவர் வழக்கு சொத்தை பெற்று செல்வதற்காக எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026.ம் ஆண்டு ஜூன் மாதம் 8–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.08 18:05:12 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| வ எண். | சாட்சிகள் விபரம் | விளக்கம் |
|---|---|---|
| 1. | திரு. ரவி | நிகழ்நிலை புகார்தாரர் |
| 2. | திரு. ராஜு | பார்வை மகஜர் சாட்சி |
| 3. | திரு. ஹரிஸ் மோன் | கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சி |

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.08 18:05:22 +0530

| | | |
|---|---|---|
| 4. | திரு. கபில்தேவ், காவல் உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| **வரிசை எண்.** | **சான்றாவண விபரம்** | **யார் மூலம் நிரூபிக்கப்பட்டது** |
|---|---|---|
| 1. | புகார் | அ.சா.1 |
| 2. | TN 43 Y 7822 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் புகைப்படம் | அ.சா.2 |
| 3 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.2 ன் கையெழுத்து | அ.சா.2 |
| 4 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அ.சா.3 ன் கையெழுத்து | அ.சா.3 |
| 5. | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.3 |
| 6 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.3 |
| 7 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.3 |
| 8. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| 9. | பார்வை மகஜர் | அ.சா.4 |
| 10. | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| 11 | படிவம் – 91 | அ.சா.4 |
| 12 | படிவம் – 91 | அ.சா.4 |

**எதிரி தரப்பு சாட்சிகள் :**

இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:**

இல்லை

**<u>சான்று பொருட்கள்:–</u>**
இல்லை

**<u>குறிப்பு:–</u>**

1. எந்த ஒரு சாட்சியும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.

2. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.

3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.08 18:05:35 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**